**கபீர் புரஸ்கார் விருது-2026**

பொது (பொது-1)த்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

## செய்தி வெளியீடு

சமுதாய மற்றும் வகுப்பு நல்லிணக்கத்திற்கான "கபீர் புரஸ்கார் விருது", ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து இந்திய குடிமக்களும் (ஆயுதப்படை வீரர்கள், காவல், தீயணைப்புத் துறை மற்றும் அரசுப் பணியாளர்களின் சமுதாய நல்லிணக்க செயல், அவர்கள் ஆற்றும் அரசுப் பணியின் ஒரு பகுதியாக நிகழும் பட்சத்தில் நீங்கலாக) இவ்விருதினைப் பெறத் தகுதியுடையவராவர். இவ்விருதானது, ஒரு சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற சாதி, இன, வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது அவர்களது உடைமைகளையோ வகுப்புக் கலவரத்தின் போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பாற்றியது வெளிப்படையாகத் தெரிகையில் அவரது உடல் மற்றும் மனவலிமையைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது. இவ்விருதானது மூன்று அளவுகளில், தலா ஒரு நபர் வீதம் மூவருக்கு வழங்கப்படுகிறது. முறையே ரூ.20,000/-, ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/-க்கான காசோலை மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும்.

2. 2026-ஆம் ஆண்டு, குடியரசு தினத்தன்று வழங்கப்படவுள்ள கபீர் புரஸ்கார் விருதிற்கென தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே 15.12.2025 -அன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.01.2026 குடியரசு தினத்தன்று விருது வழங்கி கௌரவிக்கப்படுவர்.

**<u>KabirPuraskar Award -2026</u>**

**Public (General-I) Department,**
**Secretariat, Chennai - 600 009.**

## <u>NOTIFICATION</u>

The "KabirPuraskar" award for the act of social and communal harmony will be presented by the Hon'ble Chief Minister of Tamil Nadu every year during Republic Day Celebrations. Any Indian citizen residing in Tamil Nadu (other than members of the Armed Forces, Police Forces and Members recognized Fire Services, Government Servants, if the act performed by them falls in the sphere of their duty) are eligible for this award. The award is given for act of physical/moral courage and humanity exhibited by members of one community in saving the lives and properties of the members of another community during communal riots. This award consisting of three categories and the cheque for Rs.20,000/-, Rs.10,000/- and Rs.5,000/- with citation will be given to three persons respectively.

2. The eligible nominations for "KabirPuraskar" award for the year 2026will be received only on the online portal **<u>https://awards.tn.gov.in</u>** designed for this purpose on or before **<u>15.12.2025</u>**. The applications which are not received within the prescribed time will be rejected. The awardees will be selected by the selection committee constituted for this award. The award will be presented to the awardee by the Hon'ble Chief Minister during the Republic Day Celebrations on 26th January 2026.